# ST SERAPHINA



# MARCH 12

# புனித செராப்பினா (-1253)

இவள் குழந்தையாக இருக்கும் போது தந்தையை இழந்தாள். இவளுக்கு ஒரு பொல்லாத குழந்தை நோய் இருந்தது. சிலுவையில் தொங்கிய இயேசுவைக் கண்டுபாவிக்க விரும்பிய இவள் தன்னைக் கடினமாக பலகை மீது கிடத்த சொன்னாள். வேலை செய்ய அல்லது பிச்சையெடுக்க இவளுடைய தாய் வெளியே போன பொழுதெல்லாம் அவள் தனியே படுத்துக் கிடப்பாள். கையை முதலாய் அசைக்க முடியாது. படுத்துக் கிடந்ததால் முதுகில் எங்கும் புண்கள் ஏற்பட்டன. சீழ் வடிந்து கொண்டிருந்த உடல் பலகையோடு சேர்ந்து விட்டது. அவளுக்கு எதிரே சுவரில் இயேசுவின் பாடுபட்ட சுரூபம் தொங்கியது. அவரையே விடாது நோக்குவாள். "ஆண்டவரே, எனது காயங்களையல்ல, ஆனால் உமது காயங்களையே நினைந்து நான் வாடுகிறேன். எனது வேதனையை பொறுமையாக சகித்து, இவ்விதம் பாவிகளால் உமக்கு ஏற்படும் வேதனையை நான் தடுக்கக் கூடுமானால் நலமாயிருக்கும்: என்பாள். தாய் இறந்ததும் அண்டை வீட்டுக்காரர்கள் இவளுக்கு உதவி செய்ய விரும்பினார்கள். என்றாலும் புண்களிலிருந்து வந்த நாற்றத்தை கண்டு பயந்து பின் வாங்குவார்கள். இவள் இறந்த பிறகு இவள் படுத்திருந்த பலகையில் இனிய மணமுள்ள அழகிய மலர்கள் பல புதுமையாக காணப்பட்டது.

**சிந்தனை:**

நாம் நம்மை மறந்து பிறரை அதிகமாக நினைக்கவேண்டும். முக்கியமாக இயேசு நமக்காகப் பட்ட பாடுகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, நான் துன்புறும் போது உமது பாடுகளை நினைக்கும் வரம் தாரும்.


SAINTS FUN FACTS
Saint Seraphina was from a poor family in Italy and known for her self denial and acts of penance. She was a very helpful child doing many of the household chores in addition to spinning and sewing.
SHEPPARD